ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வைபவம்

(ஸ்ரீ உ.வே. கோமடம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, வைகுண்டவாஸீ)

## தேவநாதன் இவரை வழிமறித்தல்

இப்படி ஸ்ரீ ஹயக்ரீவனுடைய கடாக்ஷ விசேஷத்தினால் ஸர்வ வித்யாபாரங்கதராய் விளங்கின ஸ்வாமி சிரகாலம் திருவஹீந்திரபுரத்தில் வஸித்திருந்துவிட்டுத் தம்முடைய ஜன்மபூமியான காஞ்சீபுரம் செல்ல உத்யோகித்து, திருவஹீந்திரபுரத்தை விட்டுப் புறப்பட்டு, அருகாமையிலுள்ள துஞ்சா நீர் வளம் சுரக்கும் பெண்ணையாற்றங்கரையில் ஓரிரவு தங்கிநிற்க, 'வைகுந்தனாகப் புகழ' என்கிறபடியே இவருடைய மங்களாசாஸனத்தினால் தாம் விசேஷமான அதிசயத்தைப் பெறவேண்டும் என்று இந்த க்ஷேத்திரத்தில் முன்னி வந்துறைந்திருந்த அடியவர்க்கு மெய்யனும் - ஆழ்வாரால் பெருமைபெற எண்ணியிருந்த திருப்பேர் எம்பெருமான், ஆழ்வார் 'திருமாலிருஞ்சோலை' என்றாரம்பித்த உடனே அவர் நெஞ்சு நிறையப் புகுந்து, தம் விஷயமாய்ப் பாடும்படி நிர்பந்தித்தாப்போலே - இவருடைய ஸ்வப்நத்தில் தோன்றி, 'உமக்கு இவ்வளவு விசேஷகடாக்ஷம் செய்தது எதற்காக?' நீர் நம் விஷயமாக வேதாந்தார்த்த ப்ரதிபாதகங்களான ஸ்தோத்ராதிகளைச் செய்யவேண்டாவோ? இந்த நம் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தைப் பலபடிகளாலும் பரவச்செய்ய வேண்டாவோ?' என்று கேட்டருள, ஸ்வாமியும் க்ரந்தநிர்மாண ஸம்ப்ரதாய ப்ரவசனாதிகளுக்கு பகவத் பாகவத ஆசார்யாதி நியமனங்களில் ஏதாவதொன்றை எதிர்பார்த்திருந்தமையினால் இப்பொழுது அது கிடைத்ததும் உடனே திரும்பி திருவஹீந்திரபுரம் எழுந்தருளினார்.

## ஸ்தோத்ராதிகளை அருளிச்செய்தல்

**இப்படித் திரும்பிவந்ததும் தம்மை இப்படிப்பட்ட ஸ்தோத்திரங்களில் ப்ரவ்ருத்திக்கும்படி நியமித்தருளின ஸ்ரீதெய்வநாயகனை அனுபவித்து, அவர் விஷயமாய் ஸ்ரீதேவநாயக பஞ்சாசத் (1) என்னும் ஸ்தோத்திரத்தை அருளிச்செய்தார். இந்த அனுபவம் முதிர்ந்து, ஆழ்வாருக்குப் போல பக்தி ச்ருங்காரமாகப் பரிணமிக்க, ஸ்ரீ தெய்வநாயகனைத் தம்முடைய பர்த்தாவாகப் பாவித்து, தாம் நாயிகாபாவத்தை அடைந்து, தானான தன்மையை மறந்து, அருகில் இருக்கும் திருத்தாயார், தோழி முதலியவர்கள் இவருடைய தசையை விண்ணப்பம் செய்யும்படி நின்ற ஸ்திதியை மும்மணிக்கோவை (2), பந்துப்பா (3),**

கழல்பா (4), அம்மானைப்பா (5), ஊசல்பா (6), ஏசல்பா (7) என்னும் ப்ரபந்தங்களில் அருளிச்செய்தார். இப்படி இந்த ப்ரபந்தங்களெல்லாம் ஸ்ரீ தெய்வநாயகனுடைய நியமனத்தினால் அருளிச்செய்யப்பட்டவை என்னும் அர்த்தத்தை ஸ்வாமி தாமே அருளிச்செய்திருப்பது மேலே நிரூபிக்கப்படும். இந்த க்ஷேத்திரத்தில் அர்ச்சாரூபம் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கோபாலனை அனுபவித்து அவர் விஷயமாக ஸ்ரீ கோபால விம்சதி (8) என்னும் ஸ்தோத்திரத்தை அருளிச்செய்தார். ஸ்ரீ ஹேமாப்ஜநாயகியை ஸேவித்து அவள் விஷயமாய் ஸ்ரீஸ்துதி (9) என்னும் ஸ்தோத்திரத்தை அருளிச்செய்தார். இப்படி ஸ்தோத்ராதிகளை அருளிச்செய்துகொண்டு ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்து கொண்டிருக்கிற நாளில் ஒரு திருவேடர்பறித் திருநாளில் ஸ்ரீபரகாலன் எம்பெருமானுடைய திருவாபரணங்களை க்ரஹணம் செய்தருளிய ஐதிஹ்யத்தை அர்ச்சாரூபத்திலும் உத்ஸவமாக நடத்திக்கொண்டிருக்கும்பொழுது, சில பரமைகாந்திகள் ஸ்வாமியை அணுகி, 'இது சாஸ்திர விருத்தமானதன்றோ? இதை நாம் ஒரு உத்ஸவமாகச் செய்வது உசிதமாகுமோ?' என்று கேட்க, ஸ்வாமியும் இவ்விஷயத்தில் சாஸ்திரம் இருக்கும் ப்ரகாரத்தை எடுத்துக்காட்டி, இது எல்லோருக்கும் உபயோகப்படுமாறு ஸ்ரீ ஸ்தேயா விரோதம் (10) என்னும் ஒரு க்ரந்தத்தை அருளிச்செய்தார். இப்படிச் சிரகாலம் திருவஹீந்திரபுரத்தில் இருந்துவிட்டு, மற்ற திவ்யதேசங்களையும் மங்களாசாஸனம் செய்தருளவேண்டும் என்று திருவுள்ளம் பற்றி, ஸ்ரீ தெய்வநாயகனுடைய நியமனம் பெற்றுக்கொண்டு புறப்பட்டார். நடுநாட்டுத் திருப்பதிகளில் மற்றொன்றானதும், நம் ஸம்ப்ரதாயத்துக்கு விசேஷ உபகாரகர்களான முதலாழ்வார்களுக்கு ஸேவை ஸாதித்து அவர்களை அனுக்ரஹித்தருளின எம்பெருமான் ஸேவை ஸாதிக்கிற க்ஷேத்திரமான திருக்கோவலூரில் ஆயனாரைத் திருவடிதொழுதுநிற்கும்பொழுது, த்ரிவிக்ரமாவதார வ்ருத்தாந்தமும், முதலாழ்வார்களை அனுக்ரஹித்த ப்ரகாரமும் அனுஸந்தான விஷயமாக அவற்றையே நிரூபித்து ஸ்ரீதேஹளீச ஸ்துதி (11) என்னும் ஸ்தோத்திரத்தை அருளிச்செய்தார். இங்கு சிலர் ஸ்வாமியை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அஸாதாரணமான திருவிலச்சினையைப் பற்றிச் சில ஸந்தேஹங்கள் கேட்க, அந்த ஸந்தேஹங்களையும் இது விஷயமாக மற்றும் உண்டாகக்கூடிய ஸந்தேஹங்களையும் பூர்வபக்ஷமாக க்ரோடீகாரம் செய்தருளி, அவற்றிற்கெல்லாம் விஸ்தரமாக ஸமாதானம் நிரூபித்தருளி ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை (12) என்னும் ஒரு க்ரந்தத்தை அருளிச்செய்தார்.

## காஞ்சீபுரத்திற்குச் செல்லுதல்

இப்படி மார்க்கத்தில் ஆயனாரைத் திருவடிதொழுது காஞ்சீபுரம் எழுந்தருளி, அங்கே ஸ்ரீ பேரருளாளரை அனுபவித்து அவர் விஷயமாக ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத் (13) என்னும் ஸ்தோத்திரத்தை அருளிச்செய்தார். இங்கு சிரகாலம் எழுந்தருளியிருந்து ஸித்தாந்த ப்ரவசனம் செய்துகொண்டிருக்கிற காலத்தில் நம்முடைய ஸித்தாந்தார்த்தங்களை எல்லோரும் ஸுலபமாய்

**அறிந்துகொள்வதற்காக அடைக்கலப்பத்து (14), அர்த்த பஞ்சகம் (15), ஸ்ரீ வைஷ்ணவ தினசரி (16), பன்னிரு நாமம் (17) என்னும் ப்ரபந்தங்களை அருளிச்செய்தார். அருகிலுள்ள திவ்யதேசத்து எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்தருளி, அவர்கள் விஷயமாய் ஸ்ரீ சரணாகதி தீபிகை (18), ஸ்ரீ அஷ்டபுஜாஷ்டகம் (19), ஸ்ரீ வேகாஸேது ஸ்துதி (20), ஸ்ரீ காமாஸிகாஷ்டகம் (21), ஸ்ரீ பரமார்த்த ஸ்துதி (22) என்னும் ஸ்தோத்திரங்களை அருளிச்செய்தார். நம்முடைய ஸம்ப்ரதாயத்திற்கு அஸாதாரணமான ஸ்ரீமந் ந்யாஸ வித்யையின் பொருள்களைச் சுருக்கமாக அனுஸந்திக்கும் பொருட்டு ஸ்ரீ ந்யாஸ தசகம் (23) என்னும் ஒரு ஸ்தோத்திரமாக ஸங்க்ரஹித்தருளினார். ரஹஸ்யத்ரயங்களினால் ப்ரதிபாதிக்கப்படும் அர்த்தவிசேஷங்களை ஸுலபமாய் அனுஸந்திப்பதற்காகச் சிறு சிறு ரஹஸ்யங்களாக நிரூபித்தருளத் திருவுள்ளம் பற்றி ஸ்ரீ ஸம்ப்ரதாய பரிசுத்தி (24), ஸ்ரீ தத்வ பதவீ (25), ஸ்ரீ ரஹஸ்ய பதவீ (26), ஸ்ரீ தத்வ நவநீதம் (27) என்னும் ரஹஸ்ய க்ரந்தங்களை அருளிச்செய்தார்.**

## உத்தர திவ்யதேச யாத்திரை

**இப்படிக் காஞ்சியில் ஸம்ப்ரதாய ப்ரவசனம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கும்பொழுது வடநாட்டுத் திருப்பதி எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்யத் திருவுள்ளம் பற்றி, காஞ்சியிலிருந்து புறப்பட்டுத் திருவேங்கடம் சென்று, அங்குத் திருவேங்கடமுடையானை ஸேவித்து அவர் அர்ச்சாரூபத்தில் ஸேவை ஸாதித்தருளுவது க்ருபையின் கார்யமாகையினால் அந்தத் தயாதேவியின் விஷயமாய் ஸ்ரீ தயா சதகம் (29) என்னும் ஸ்தோத்ரத்தை அருளிச்செய்தார். திருவேங்கடமுடையானால் நியமிக்கப்பட்டு, அங்கேயே ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துகொண்டிருக்கும்பொழுது ரஹஸ்ய நவநீதம் (29) என்னும் க்ரந்தத்தை அருளிச்செய்தார். அங்கிருந்து புறப்பட்டு கலியனுடைய மங்களாசாஸன க்ரமத்தைப் பின்பற்றி திருவதரி, திருநைமிசாரண்யம், திருச்சாளக்கிராமம், திருவயோத்யை, திருவடமதுரை, அஹோபிலம், திருவெவ்வுள், திருவிடவெந்தை முதலிய திவ்யதேசத்து எம்பெருமான்களை** ஸேவித்துவிட்டு மீண்டும் காஞ்சிக்கு எழுந்தருளி ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துவந்தார்.

## திருக்குமாரர் அவதரித்தல்

இப்படி இங்கு எழுந்தருளியிருக்கும்பொழுது ஸ்ரீ தேவாதிராஜன் இவரை அனுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றி, இவருடைய ஸ்வப்நத்தில் தோன்றி, "நாமே உமக்குப் புத்ரராய் அவதரிக்க ஸங்கல்பித்திருக்கிறோம்" என்றருளிச்செய்தார். ஸ்வாமியும் "தந்யோஸ்மி" என்று அந்த நியமனத்தைச் சிரஸாவஹிக்க, நள வருஷம் ஆவணி மாஸம் ரோஹிணீ நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் ஒரு திருக்குமாரர்

அவதரித்தருள, அவருக்கு வரதாசார்யர் என்று திருநாமம் சாற்றி, யுக்த காலத்திலே உபநயனாதிகள் செய்வித்து, வேதாந்த காலக்ஷேபாதிகளையும் செய்துவைத்தார்.

## பேரருளாளன் உத்ஸவத்தை நடத்திவைத்தல்

**ஒரு ஸமயத்தில் தேவாதிராஜனுடைய உத்ஸவத்தில் சில ப்ரதிவாதிகள் வந்து தங்களை வாதத்தில் ஜயித்தாலல்லது மேல் உத்ஸவாதிகள் நடத்தக்கூடாது என்று நிர்பந்திக்க, அவர்களை அப்பொழுதே வாதத்தில் ஜயித்து உத்ஸவத்தை நிர்விக்னமாய் நடத்திவைக்க, எம்பெருமானும் போர உகந்து, இவருக்குத் திருமாலை, திருப்பரிவட்டம் முதலியவைகளை ப்ரஸாதித்து, இவரை இவருடைய திருமாளிகைக்குத் தம்முடைய திருச்சின்ன வாத்ய மர்யாதையுடன் அனுப்பிவைக்கும்படி நியமித்தருளினான். ஸ்வாமியும் அந்தத் திருச்சின்னத்தின் ஒலி திருமந்த்ராதிகளின் அர்த்தவிசேஷங்களை உத்கோஷிப்பதாகத் திருவுள்ளம் பற்றி அதைத் திருச்சின்னமாலை (30) என்னும் ஒரு ப்ரபந்தமாக அருளிச்செய்தார்.**

## மாயி ஸந்யாஸியை நிரஸித்தல்

ஒரு மாயி ஸந்யாஸி, ஸ்வாமியை வாதத்தில் வெல்லமுடியாமல் தன் மந்த்ர சக்தியினால் ஜயிக்கலாம் என்று கொண்டு, ஸ்வாமி தம்முடைய திருமாளிகையில் சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டிருக்கும் பொழுது, அருகிலுள்ள ஒரு குளத்தில் முழுகி ஜலத்தைக்குடித்து, அது ஸ்வாமியின் திருவயிற்றில் புகுரும்படியாகச் செய்துவிட்டான். ஸ்வாமி தம் உதரம் பெருகுவதைப் பார்த்து, அதன் காரணத்தைத் தம்முடைய திவ்யசக்தியால் அறிந்து, அருகாமையிலுள்ள ஒரு தூணைக் கீற, அதிலிருந்து ஜலம் பெருக ஆரம்பித்தது. சிஷ்யர்கள் இது என்ன என்று கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது தன் மந்திரத்தின் சக்தி என்ன ஆயிற்று என்று பார்க்க வந்தவன், தான் தோற்றுவிட்டதைப் பார்த்து ஸ்வாமியின் சக்தியில் **ஈடுபட்டவனாய் அபசாரக்ஷமாபணம் செய்துவிட்டுப் போனான்.**

## திருவரங்கம் எழுந்தருளுதல்

**இப்படி ஸ்வாமி காஞ்சியில் எழுந்தருளியிருக்கும்பொழுது ஸ்ரீரங்கத்தில் அத்வைத மத வித்வான்கள் வந்து வாதத்திற்கு அழைக்க, அங்கிருந்த முதலிகள் ஸ்வாமியின் பெருமையை அறிந்தவர்களாகையினால் தாங்கள் நேரில் வாதம் செய்ய முன்போகாமல், ரங்கநாதனுடைய நியமனத்தை ஸ்வாமிக்கு அனுப்பி வைத்தார்கள். ஸ்வாமியும் உடனே புறப்பட்டு ஸ்ரீரங்கம் வந்து திருவரங்கத்தெம்பெருமானைத் திருவடிதொழுது, பகவத் த்யான ஸோபானம் (31) என்னும் ஸ்தோத்ரத்தை அருளிச்செய்தார்.**

**வாதத்திற்கு அழைத்த வித்வான்களுடன் ஏழு நாள்கள் தர்க்கம் செய்து அவர்களைத் தோற்கடித்தார். அப்பொழுது தாம் அருளிச்செய்த வாத**

**தோரணைகளை ஸங்க்ரஹித்து சததூஷணீ (32) என்னும் ஒரு க்ரந்தமாக வெளியிட்டருளினார். ஸ்ரீரங்கநாதனும் போர உகந்து, இவருக்கு விசேஷ மர்யாதைகளை ப்ரஸாதித்தருளி, இதுவரையில் வேறு ஒருவருக்கும் கிட்டாததாய் எம்பெருமான் தனக்கு அஸாதாரணமாக வைத்திருந்த வேதாந்தாசார்யர் என்கிற பிருதை அளித்து, ஸ்ரீரங்கத்திலேயே எழுந்தருளியிருந்து ஸித்தாந்த ப்ரவசனம் செய்துகொண்டிருக்கும்படி நியமித்தருளினான்.**

இப்படி ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும்பொழுது அருகில் அர்ச்சாரூபத்தில் ஸேவை ஸாதித்தருளுகிற தசாவதார எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்து, அவர்கள் விஷயமாய் தசாவதார ஸ்தோத்ரம் (38) **அருளிச்செய்தார்.**

**எம்பெருமானார் இவருடைய ஸ்வப்நத்திலே தோன்றித் தாம் அருளிச்செய்த க்ரந்தங்களுக்கு வ்யாக்யானமிட்டுத் தம் திருவுள்ளக் கருத்தை வெளியிடும்படி நியமித்தருளினார். அந்த நியமனத்தைத் தலைக்கட்டுவதற்காக அதிகரண தர்ப்பணம் (34), நிக்ஷேப ரக்ஷை (35), பாஞ்சராத்ர ரக்ஷை (36), ந்யாய பரிசுத்தி (37), தத்வமுக்தாகலாபம் (38), அதற்கு வ்யாக்யானமாக ஸர்வார்த்தஸித்தி (39), ஸேச்வர மீமாம்ஸை (40), மீமாம்ஸா பாதுகை (41), கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகை (42), கீதார்த்தஸங்க்ரஹ ரக்ஷை (43), கீதார்த்த சங்கிரகம் (ப்ரபந்தம்) (44), ந்யாய ஸித்தாஞ்ஜனம் (45), ந்யாஸ திலகம் (46), தத்வ மாத்ருகை (47), ரஹஸ்ய மாத்ருகை (48), தத்வ ஸந்தேசம் (49), ரஹஸ்ய ஸந்தேசம் (50), ரஹஸ்ய ஸந்தேச விவரணம் (51), ஸுபாஷித நீவி (52), தத்வ ரத்னாவளி (53), தத்வ ரத்னாவளி ப்ரதிபாத்ய ஸங்க்ரஹம் (54), வாதித்ரய கண்டனம் (55), பூஸ்துதி (56), வேதார்த்த ஸங்க்ரஹ வ்யாக்யானம் (57) என்னும் க்ரந்தங்களை அருளிச்செய்தார்.**

## முன்னாள் புணராத பரமதப்போர் பூரித்தல்

**இப்படி ஸ்ரீரங்கத்தில் ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்து, தம்மை ஆச்ரயித்தவர்களுக்குக் காலக்ஷேபாதிகள் சொல்லிக்கொண்டிருக்கிற காலத்தில் தமக்கு இவ்வளவு பெருமைகள் கிட்டினதற்கு மூலகாரணமானவரும், தம்மை அனுக்ரஹித்தருளுவதற்காகவே முந்தி வந்து உறைந்திருக்குமவரான அடியவர்க்கு மெய்யன் திருவடிவாரத்தில் மீண்டும் கொஞ்ச காலம் வஸிக்கத் திருவுள்ளம் பற்றி ரங்கநாதனுடைய நியமனம் பெற்று, திருவஹீந்திரபுரம் வந்து சேர்ந்தார். இங்கு முன்போல் ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துகொண்டு விசேஷ வைபவத்துடன் எழுந்தருளியிருக்கும் காலத்தில் பரமதஸ்தர்கள் எல்லோரும் ஒன்றுகூடி வந்து தங்களுடன் வாதம் செய்ய அழைத்தார்கள். ஸ்வாமியும் அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே தங்கள் மதக்கொள்கைகளைக் கூறவேண்டும் என்றும், தாமும் ஒவ்வொன்றாகவே பதில் கூறி நிரஸிப்போம் என்றும் ஏற்பாடு செய்துகொண்டு, அவர்களே தாங்கள் தோற்றோம் என்று**

**ஒப்புக்கொள்ளும்படி நிரஸித்தருளினார். அவர்கள் கூறிய கக்ஷிகளையும், அவற்றை நிராகரித்த படிகளையும் பரமதபங்கம் (58) என்று ஒரு க்ரந்தமாக அருளிச்செய்திருக்கிறார்.**

## கவிதார்க்கிக ஸிம்ஹம் என்னும் பிருது பெறுதல்

**இப்படி எதிர்த்து வந்த வாதிகள் எல்லோரையும் ஒருவராகவே நிரஸித்தருளின சக்திவிசேஷத்தை வெளிப்படுத்துவதற்காக தேவநாதன் இவருக்கு 'கவிதார்க்கிக ஸிம்ஹம்' என்னும் பிருதை ப்ரஸாதித்தருளினான். இங்கு எழுந்தருளி ஸித்தாந்த ப்ரவசனம் பண்ணிக்கொண்டிருக்கும்பொழுது ஸுதர்சநாஷ்டகம் (59), கருட தண்டகம் (60), கருட பஞ்சாசத் (61), ஹயக்ரீவ ஸ்தோத்ரம் (62), மஹாவீர வைபவம் [ரகுவீர கத்யம்] (63), ஈசாவாஸ்ய உபநிஷத் பாஷ்யம் (64), அச்யுத சதகம் (65), நவமணிமாலை (66), என்னும் க்ரந்தங்களை அருளிச்செய்தார்.**

## திருக்கிணறு நிர்மாணம் செய்தல்

இப்படி அயிந்தை மாநகரில் எழுந்தருளியிருக்கும்பொழுது ஒரு கொத்தன் வந்து "நீர் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராகில் ஒரு கிணறு நிர்மாணம் செய்யும்" என நிர்பந்திக்க, ஸ்வாமியும் இது முன்பு தோற்ற வாதிகளின் க்ருத்ரிமம் என்று அறிந்து, ஒரு கிணற்றை நிர்மாணம் செய்தார். இது இன்றும் ஸுரக்ஷிதமாய் இருக்கிறது. இப்படித் தாம் ஸ்தோத்ராதிகளை அருளிச்செய்தது ஸ்ரீதேவநாதனுடைய நியமனத்தை நிறைவேற்றுவதற்காக என்று நவமணிமாலையின் இறுதியில் ஸ்பஷ்டமாக அனுஸந்திக்கிறார்.

## காஞ்சீபுரத்தில் பாம்பாட்டியை ஜயித்தல்

காஞ்சீபுரத்தில் ஸ்வாமியை ஆச்ரயித்த சிஷ்யர்களில் சிலர் திருவஹீந்திரபுரம் வந்து ஸ்வாமியைத் தண்டன் ஸமர்ப்பித்து, காஞ்சீபுரம் எழுந்தருளிக் காலக்ஷேபம் ஸாதிக்கவேண்டுமென ப்ரார்த்தித்ததினால் ஸ்வாமி, தேவநாதன் நியமனம் பெற்று, அங்கு சென்று ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனம் செய்துகொண்டிருக்கையில் ஒரு பாம்பாட்டி வந்து தன்னை ஜயிக்கவேண்டுமென நிர்பந்திக்க, ஸ்வாமி அவனுடனே என்ன வாதம் செய்வது என்று மௌனமாய் இருக்க, அவன் தன்னுடைய பாம்புகளை அவிழ்த்துவிட்டு அவற்றை ஸ்வாமி மேல் ஏவ, ஸ்வாமி கருட மந்த்ரத்தை ஸ்மரித்துத் தம்மைச் சுற்றி ஏழு கோடுகளைப் போட, பாம்புகள் அந்தக் கோடுகளைத் தாண்ட முடியாமல் கோட்டை மட்டும் சுற்றி வர, பாம்பாட்டி தன்னிடமுள்ள மிகவும் க்ரூரமுள்ள வேறொரு பாம்பை ஸ்வாமி மேல் ஏவ, அது மந்த்ரத்துக்கு வசப்படாத ஜாதியாகையினால் அது ஏழு கோடுகளையும் தாண்டி ஸ்வாமியை அணுக, ஸ்வாமி வைநதேயனை ஸ்மரிக்க, அவர் உடனே வட்டமிட்டுக் கொண்டு கீழே இறங்கி அந்தப் பாம்பைத் தூக்கிக்கொண்டு உயரச் செல்லுவதைப் பார்த்த பாம்பாட்டி, ஸ்வாமியின் பெருமையைத் தெரிந்துகொண்டு, திருவடிகளில் விழுந்து மன்னிப்பு கேட்டுக்கொண்டு,

தனக்கு ஜீவனம் அந்தப் பாம்பினாலாகையாலே அதை மீட்டுக் கொடுக்கும்படி ப்ரார்த்திக்க ஸ்வாமியும் அப்படியே செய்தருளினார்.



**சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு**

**தொடரும். . .**